## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No.75/2018 P.W. 7 /LW 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சுப்பிரமணியன் - உதவி ஆணையர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 05.05.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் தற்சமயம் ஸ்ரீரங்கம் உதவி ஆணையராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். 2017 ஆம் வருடம் பரவாக்கோட்டை வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். 27.08.2017 ஆம் தேதி நான் மன்னார்குடி வட்டக்காவல் ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு வகித்தேன். 27.08.2017 ஆம் தேதி 13 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. பிரபு மன்னார்குடி நகர காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 13 மணியளவில் திரு. அயூப் காவல்நிலையம் ஆஜராகி ஒரு புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரின் அடிப்படையில் மன்னார்குடி நகர காவல் நிலையக்குற்ற எண். 563/2017 ச/பி. 457, 380 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து எனக்கு அனுப்பிய வழக்கு கோப்பிணை பெ பற்று நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சம்பவ இடம் சென்று 14.45 மணிக்கு சாட்சிகள் ஜெகபர் அலி மற்றும் அப்துல் அஜாப்தீன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்து மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி மாதிரி வரைபடம் **அசாஆ. 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் அயூப் , ரசீதா, சமரசம் , ஜெயராஜ் , முகமது அக்பர்கான், அப்துல்காதர் , உமா , ஜெகபர் அலி, அப்துல் அசாப்தீன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் திருவாரூர் நடமாடும் தடய அறிவியல் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தும், மாவட்ட கைரேகை பிரிவு மற்றும் மோப்பநாய் பிரிவிற்கும் தகவல் தெரிவித்து அதன் அடிப்படையில் அவர்கள் நேரில் வந்து சம்பவ இடத்தை ஆய்வு செய்தனர். மோப்ப நாய் ஸ்டெபி சம்பவ இடம் வந்தது. மோப்பம் பிடித்து பந்தலடி மதுபானக்கடை வரை சென்று நின்று விட்டது. பிறகு உள்ளூர் செயல்முறை குற்றவாளிகள் பட்டியல் தயார் செய்யப்பட்டும், மாவட்ட குற்றப்பதிவேடுகள் கூடத்தில்

இருந்து செயல்முறை குற்றவாளிகள் பட்டியல் பெறப்பட்டும் தனிக்கை செய்யப்பட்டது. இந்நிலையில் மன்னார்குடி நகர காவல் ஆய்வாளராக மணிவேல் அவர்கள் பொறுப்பேற்றவுடன் வழக்கு கோப்புகளை அவரிடம் ஒப்படைத்து விட்டேன். மேற்படி மணிவேல் அவர்கள் வழக்கு கோப்புகளை பெற்றுக்கொண்டார்.

**குறுக்கு விசாரணை :_குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.முச. 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் _:**

இந்த வழக்கில் வழக்குச்சம்பவ இடம் என்பது காவல்நிலையத்தில் இருந்து 1 கிமீ கிழக்கில் உள்ளது. எவ்வளவு நேரத்தில் போகமுடியும் என்றால் மன்னார்குடி காவல்நிலையத்தில் இருந்து 5 நிமிடத்தில் சென்று விடலாம் . நான் பரவாக்கோட்டை காவல்நிலையத்தில் பணிபுரிந்து வந்ததால் சுமார் 1 மணி நேரம் ஆகும். நிகழ்நிலை புகார்தாரர் தனது புகாரில் அதிகாலை 3.15 மணிக்கு நான் சென்று பார்த்ததாக கூறியுள்ளாரா? என்றால் ஆம், கூறியுள்ளார். காவல்நிலையத்தில் புகார் கொடுத்த நேரம் மதியம் 1 மணி என்றால் சரிதான். 9 மணிநேரம் காலதாமதம் என்றால் சரிதான். மேற்படி 9 மணிநேரம் காலதாமதம் குறித்து நான் நிகழ்நிலை புகார்தாரரிடம் பெற்ற வாக்குமூலத்தில் எதுவும் பதிவு செய்தேனா என்றால் எதுவும் பதிவு செய்யவில்லை. காவல்நிலையத்தில் தகவல் பெறப்பட்ட நேரம் பகல் 1 மணி எஎன்றால் சரிதான். மேற்படி நேரத்திற்கு முன்பாக காவல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு யாரும் சென்றார்களா என்றால் நான் செல்லவில்லை. வேறு யாரும் சென்றார்களா என்று எனக்கு தெரியாது. நிகழ்நிலை புகார்தாரர் அசா 1 அயூப் தனது சாட்சியத்தில் காலை 10 மணிக்கு சம்பவ இடத்திற்கு போலீசார் வந்ததாக சாட்சியம் அளித்துள்ளதை பொருத்து மேற்படி 10 மணிக்கு காவலர்கள் யாரும் சென்றார்களா? என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மேற்படி தேதியில் சுமார் 2.30 மணியளவில் சென்றேன். சாட்சிகள் முன்னிலையில் 2.45 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். வழக்குச்சம்பவ இடத்தில் அசா 1 அயூப் கூறியுள்ள தெருப்பக்கத்தில் உள்ள கதவில் உடைக்கப்பட்ட பூட்டையும், பேர்க்கப்பட்ட கொண்டியையும் நான் எதுவும் கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. நான் முதல் விசாரணை

சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளில் நடமாடும் தடய அறிவியல் ஆய்வத்திற்கு தகவல் கொடுத்ததை பொருத்து அவர்கள் என் முன்னிலையில் எதுவும் ஆய்வுகள்மேற்கொண்டார்களா என்றால் அவர்கள் ஆய்வுகள் மேற்ெகாண்டபோது நான் சம்பவ இடத்தில் இல்லை. நான் சொல்வதுபோல் நடமாடும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு எந்தவித தகவலும் கொடுக்கவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வுகள் எதுவும் சயெ்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஆய்வு செய்திருந்தால் என் முன்னிலையில் ஆய்வு செய்திருப்பார்கள் அவர்கள் வராததால்தான் என் முன்னால் எந்த ஆய்வும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் சாட்சிகள் இருவரும் இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரின் உறவினர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி வழக்குச்சம்பவம் குறித்து எங்களது காவல்நிலையத்தில் 9, 10 மணியளவில் தகவல் கிடைத்தும் மெத்தனமாக இருந்து சரியான முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் சம்பவ இடத்தை சரியான முறையில் பார்வையிட்டு தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்வில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காணாமல் போனதாக கூறுப்பட்ட செல்போன் மற்றும் டேப் ஆகியவற்றை பொருத்து நிகழ்நிலை புகார்தாரரிடம் அது என்ன வகை , அதற்கான ரசீது, ஐ.எம்.இ.ஐ போன்ற தகவல்களை நான் பெற்றேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த சம்பவ இடத்தை குறிப்பிட்டு காட்டும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்தவை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.